



# Novena to St Alphonsa

By St Mary's Tamil Ministry

## புனித அல்போன்சா நவநாள் செபம்

முத: அர்ச்சிஷ்ட சிலுவை அடையாளத்தினாலே எங்கள் சத்துருக்களிடமிருந்து எங்களை இரட்சித்தருளும் எங்கள் சர்வேசுவரா! தந்தை , மகன் , தூய ஆவியின் பெயராலே

*எல்: ஆமென்.*

*எல்:* புனித அல்போன்சம்மாளே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளும். (மும்முறை)

### தொடக்க செபம்

முத: எல்லாம் வல்ல தந்தையே , புனித அல்போன்சம்மாளின் வாழ்வு மூலமாகவும், அவரது துறவற சேவையின் வழியாகவும் உமது கொடைகளைப் பொழிந்து எங்களை விசுவாசத்தில் உறுதிப்படுதுவீராக. மோட்ச வீட்டின் மீதான நம்பிக்கையில் எங்களை வழி நடத்தும். எங்கள் இதயங்களை இறையன்பால் பற்றி எரியச் செய்வீராக. புனித அல்போன்சம்மாளை நீர் புண்ணிய வழியில் நடத்தி சென்றதுபோல எங்களையும் நல்வழியில் நடத்தியருளும். நாங்கள் தாழ்சியிலும் எளிமையிலும் பிரமாணிக்கத்துடன் உமக்கு ஊழியம் புரிந்து புனிதத்திலும் விவேகத்திலும் தெய்வ பயத்திலும் நாளுக்கு நாள் முன்னேறி சென்றிட எங்களுக்கு அருள் புரியும். ஆமென்.

### பரிசுத்த ஆவி ஜெபம்

முத: பரிசுத்த ஆவியே தேவரீர் எழுந்தருளி வாரும். பரலோகத்திலே உம்முடைய திவ்விய பிரகாசத்தின் கதிர்களை வரவிடும். தரித்தர்களுடையே பிதாவே, கொடைகளைக் கொடுக்கிறவரே, இதயங்களின் பிரகாசமே எழுந்தருளி வாரும். உத்தம ஆறுதலானவரே, ஆத்துமங்களுக்கு மதுரமான விருந்தாளியே, பேரின்ப இரசமுள்ள இளைப்பாற்றியே, பிரகாசத்தின் சுகமே, வெயிலின் குளிர்ச்சியே, அழுகையின் தேற்றரவே எழுந்தருளி வாரும்.

வெகு ஆனந்தத்தோடே கூடியிருக்கின்ற பிரகாசமே உமது விசுவாசிகளுடைய இதயங்களின் உற்பனங்களை நிரப்பும். உம்முடைய தெய்வீகமின்றியே மனிதரிடத்தில் குற்றமில்லாதது ஒன்றுமில்லை. அசுத்தமாயிருக்கிரதைச் சுத்தம் பண்ணும். உலர்ந்ததை நனையும். நோவாயிருக்கிரதைக் குணமாக்கும். வணங்காதை வணங்கப் பண்ணும். குளிரோடிருக்கிரதைக் குளிர்போக்கும். தவறினதை செம்மையாய் நடத்தும். உம்மை நம்பின உம்முடைய விசுவாசிகளுக்கு உம்முடைய திருக்கொடைகள் ஏழையும் கொடுத்தருளும். புண்ணியத்தின் பேறுகளையும், நல்ல மரணத்தையும், நித்திய மோட்சானந்த சந்தோசத்தையும் எங்களுக்குத் தந்தருளும். ஆமென்.

## இயேசு கற்றுத் தந்த இறைவேண்டல்

முத: விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே, உமது பெயர் தூயது எனப் போற்றப்பெறுக! உமது ஆட்சி வருக! உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல மண்ணுலகிலும் நிறைவேறுக!

*எல்: எங்கள் அன்றாட உணவை இன்று எங்களுக்குத் தாரும். எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்வோரை நாங்கள் மன்னிப்பது போல எங்கள் குற்றங்களை மன்னியும். எங்களை சோதனைக்கு உட்படுத்தாதேயும். தீயோனிடமிருந்து எங்களை விடுவித்தருளும். ஆமென்.*

## மங்கள வார்த்தை மன்றாட்டு

முத: அருள் மிகப் பெற்ற மரியே வாழ்க! / ஆண்டவர் உம்முடனே. / பெண்களுக்குள் ஆசி பெற்றவர் நீரே. / உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசுவும் / ஆசி பெற்றவரே./

*எல்: தூய மரியே / இறைவனின் தாயே / பாவிகளாய் இருக்கிற எங்களுக்காக / இப்பொழுதும் / எங்கள் இறப்பின் வேளையிலும் / வேண்டிக்கொள்ளும். ஆமென்.*

## புனித அல்போன்சா செய்த செபம்

ஓ என் ஆண்டவராகிய இயேசுவே உம் திரு இதயத்தின் காயத்தினுள் என்னை நீர் மறைப்பீராக. அன்பும் மதிப்பும் பெறுவதற்கான ஆசையினின்று என்னை விடுவித்தருளும். பேரும் பெருமையும் தேடுவதற்கான முயற்சியினின்று என்னைக் காப்பாற்றும். நான் சிறு அணுவளவேனும் உம் திரு இதயத்தினது அன்புத்தீயின் ஒரு பொறியும் ஆகும் வரையில் என்னை நீர் தாழ்த்துவீராக. எல்லாப் படைப்புக்களையும் என்னையுமே மறந்து விடுவதற்கான அருளை எனக்கு தந்தருளும். சொல்ல முடியாத இன்பமாகிய இயேசுவே, உலக ஆறுதல்கள் அனைத்தையும் எனக்கு கசப்பாக மாற்றியருளும். நீதியின் கதிரோனாகிய என் இயேசுவே உம திரு கதிர்களால் என் உள்ளத்துக்கு தெளிவையும் புத்திக்கு ஒளியையும் அளித்து என் இதயத்தைத் தூய்மைப்படுத்துவீராக. உம்மீது கொண்ட அன்பினால் என்னை எரிய செய்து உம்முடன் என்னை சேர்த்துக்கொள்ளும். ஆமென்.

## இறை வேண்டல்

முத: ஆண்டவரே உம்மை நோக்கி என் உள்ளத்தை உயர்த்துகின்றேன். என் கடவுளே உம்மில் நம்பிக்கை கொள்கிறேன்.

*எல்: நான் வெட்கமுற விடாதேயும்.என் பகைவர் என்னைக்கண்டு நகைக்க விடாதேயும்.*

முத: உண்மையிலேயே உம்மை நம்பும் எவரும் வெட்கமுறுவதில்லை காரணமின்றி துரோகம் செய்பவரோ வெட்கத்திற்கு உள்ளாவர்.

*எல்: ஆண்டவரே உம் பாதைகளை நான் அறியச் செய்தருளும். உம் வழிகளை எனக்குக் கற்பித்தருளும். உமது உண்மை நெறியில் என்னை நடத்தி எனக்கு கற்பித்தருளும். ஏனெனில் நீரே என் மீட்பராம் கடவுள். உம்மையே நான் நாள் முழுதும் நம்பியிருக்கிறேன்.*

முத: ஆண்டவரே உமது இரக்கத்தையும் உமது பேரன்பையும் நினைத்தருளும். ஏனெனில் அவைத் தொடக்க முதல் உள்ளவையே.

*எல்: என் இளமை பருவத்தின் பாவங்களையும் குற்றங்களையும் நினையாதேயும். உமது பேரன்பிற்கு ஏற்ப என்னை நினைத்தருளும். ஏனெனில் ஆண்டவரே நீரே நல்லவர்.*

முத: ஆண்டவர் நேர்மையுள்ளவர் ஆகையால் அவர் பாவிகளுக்கு நல்வழியைக் கற்பிக்கின்றார்.

*எல்: எளியோரை அவர் நேரிய வழியில் நடத்துகின்றார். எளியோர்க்குத் தமது வழியை கற்பிக்கின்றார். ஆண்டவரது ஒழுங்குமுறையைக் கடைபிடிப்போருக்கு அவருடைய பாதைகளெல்லாம் பேரன்பும் உண்மையும் உள்ளவனாய் விளங்கும்.*

முத: தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவிக்கும் மகிமை உண்டாவதாக.

*எல்: தொடக்கத்திலிருந்தது போல இப்பொழுதும் எப்பொழுதும் இருப்பதாக ஆமென்.*

நற்செய்தி வாசகம்

✠ மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 15: 21-28

அக்காலத்தில் இயேசு தீர், சீதோன் ஆகிய பகுதிகளை நோக்கிச் சென்றார். அவற்றின் எல்லைப் பகுதியில் வாழ்ந்துவந்த கானானியப் பெண் ஒருவர் அவரிடம் வந்து, “ஐயா, தாவீதின் மகனே, எனக்கு இரங்கும்; என் மகள் பேய் பிடித்துக் கொடுமைக்குள்ளாகி இருக்கிறாள்” எனக் கதறினார். ஆனால் இயேசு அவரிடம் ஒரு வார்த்தைகூட மறுமொழியாகச் சொல்லவில்லை. சீடர்கள் அவரை அணுகி, “நமக்குப் பின்னால் கத்திக்கொண்டு வருகிறாரே, இவரை அனுப்பிவிடும்” என வேண்டினர்.

அவரோ மறுமொழியாக, “இஸ்ரயேல் குலத்தாருள் காணாமற்போன ஆடுகளாய் இருப்போரிடமே நான் அனுப்பப்பட்டேன்” என்றார். ஆனால் அப்பெண் அவர்முன் வந்து பணிந்து, “ஐயா, எனக்கு உதவியருளும்” என்றார். அவர் மறுமொழியாக, “பிள்ளைகளுக்குரிய உணவை எடுத்து நாய்க்குட்டிகளுக்குப் போடுவது முறையல்ல” என்றார். உடனே அப்பெண், “ஆம் ஐயா, ஆனாலும் தங்கள் உரிமையாளரின் மேசையிலிருந்து விழும் சிறு துண்டுகளை நாய்க்குட்டிகள் தின்னுமே” என்றார். இயேசு மறுமொழியாக, “அம்மா, உமது நம்பிக்கை பெரிது. நீர் விரும்பியவாறே உமக்கு நிகழட்டும்” என்று அவரிடம் கூறினார். அந்நேரம் அவர் மகளின் பிணி நீங்கியது...

கிறிஸ்துவின் நற்செய்தி

விசுவாசிகளின் மன்றாட்டு

முத: அன்பார்ந்தவர்களே இறைவன் தம் புனிதர்கள் வழியாக பல புதுமைகளை செய்து வருகின்றார். நம் மண்ணின் புனிதை புனித அல்போன்சாவின் பரிந்துரையை மிகுந்த மகிழச்சியோடும் நம்பிக்கையோடும் நாடுவோம்.

முத: இறைவா நீர் புனித அல்போன்சாயாவைப் புனித நிலைக்கு உயர்த்தினீர். நாங்களும் தூய வாழ்வு வாழவும் இறைவேண்டுதலிலும், பக்தி முயற்சிகளிலும் மென்மேலும் வளர தூய்மையின் ஆவியைப் புதுப்பிக்கும் ஆவியை எம்முள்ளே படைத்தருள வேண்டுமென்று தூய அல்போன்சா வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

*எல்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

முத: புனித அல்போன்சா நோயின் மிகுதியிலும் கொடிய வாதைகளிலும் இறைநம்பிக்கையில் உறுதியாய் நிலைத்திருந்தது போல நாங்களும் துன்ப துயரங்களில் இறைவனின் திருவுளத்தை ஏற்று வாழ வரமருள வேண்டுமென்று தூய அல்போன்சா வழியாக இறைவா உம்மை மன்றடுகிறோம்.

*எல்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்*

முத: அன்பு இயேசுவே நீர் எம் பாவங்களுக்காக உம்மையே அன்று கால்வாரியில் பலிபாக்கினீர். புனித அல்போன்சா உம்மைப்போல் பிறருக்காக தம்மையே தகன பலியாக்கினார். நாங்களும் எங்கள் வாழ்வின் ஒவ்வொரு நொடியையும் பிறருக்காக வழங்கும் மனம் தந்தருள வேண்டுமென்று தூய அல்போன்சா வழியாக இறைவா உம்மை வேண்டுகிறோம்.

*எல்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

முத: எம்மைக் காக்க வந்த இயேசுவே! நீர் உம் பாடுகளின் பயணத்தில் தந்தையே என் விருப்பபடியல்ல ஆனால் உம் விருப்பபடியே ஆகட்டும் என்று கூறியது போல புனித அல்போன்சாவும் இறை திருமுறைபடி வாழ்ந்தார். நாங்களும் அனைத்து செயல்களிலும் திருமறையின் படிப்பினைகளின்படி வாழவும், இறைவனின் அதிமிகு மகிமைக்காக உழைக்கவும் வரமருள வேண்டுமென்று தூய அல்போன்சா வழியாக இறைவா உம்மை வேண்டுகிறோம்.

*எல்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்*

முத: அன்பின் இறைவா புனித அல்போன்சா அனைத்து மாணாக்கர் மீதும் அன்பும் பரிவும் கொண்டிருந்தார். அனைத்து மாணவ மாணவியரையும் ஆசீர்வதித்து நல்வழி நடத்த வேண்டுமென்று தூய அல்போன்சா வழியாக இறைவா உம்மை வேண்டுகிறோம்.

*எல்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

(நமது தனிபட்ட தேவைகளுக்காக வேண்டுவோம்)

முத: இறைவா உமது அளவில்லாத மகிமைகளுக்காக உமக்கு நன்றி கூறுகிறோம். நீர் புனித அல்போனசாவை எங்கள் முன் மாதிரியாகவும் பாதுகாவலியாகவும் தநதீரே அவரின் பரிந்துரையால் நாங்கள் அன்பிலும் இரக்கத்திலும் சிறந்தவர்க்கலாய் வாழந்து இறையரசின் விழுமியங்களின்படி வாழ வரமருள வேண்டுமென்று எம் ஆண்டவர் யேசு கிறிஸ்து வழியாக மன்றாடுகிறோம். ஆமென்.

இறைவா உமது அளவில்லாத மகிமைகளுக்காக உமக்கு நன்றி கூறுகிறோம். நீர் புனித அல்போனசாவை எங்கள் முன் மாதிரியாகவும் பாதுகாவலியாகவும் தநதீரே அவரின் பரிந்துரையால் நாங்கள் அன்பிலும் இரக்கத்திலும் சிறந்தவர்க்கலாய் வாழந்து இறையரசின் விழுமியங்களின்படி வாழ வரமருள வேண்டுமென்று எம் ஆண்டவர் யேசு கிறிஸ்து வழியாக மன்றாடுகிறோம் ஆமென்.

## தூய அல்போன்சா மன்றாட்டு

முத: தூய அல்போன்சாவே, தூய வாழ்வின் முன்மாதிரியே, தூறவியருக்கு கலங்கரையே, துன்பங்களால் புடமிடப்பட்டவரே, கோதுமை மணி போல் அறைக்கப்பட்டு உம்மையே இயேசு வாழும் அப்பமாக மாற்றத்துணிந்தவரே, ஏழைகளின் ஏந்தலே, துயரப்படுவோரின் துணையாளரே, நன்மை செய்ய துணிவோருக்கு நல் வழிகாட்டியே, உம்மை நம்பி ஓடோடி வந்தோம். கவலையோடும் கண்ணீரோடும் கலக்கத்தோடும் வந்த எமக்கு ஆறுதல் தாரும். அமைதியின்றி ஆதரவின்றி வந்த உம் பிள்ளைகளைப் பாரும். எம்மை உம் கருணை கரங்களால் அரவணைத்தருளும். வறுமையாலும் நோயாலும் தனிமையாலும் முதுமையாலும் முன்னேற வழியின்றி முடங்கிக்கிடக்கும் நாங்கள் உம் முன் வந்து முழந்தாழிட்டோம். வாடிவிடும் எம் மலரை வாடாமலர் ஆக்கும், தேடிவரும் உம் சொந்தங்களை வற்றாத அன்பினால் தேற்றும் நாடிவரும் எல்லோருக்கும் நல்வாழ்வைத் தந்து வழிகாட்டும். மாறா அன்பில் வாழ்ந்த இறைப்புனிதையே உம்மை நம்பி வந்த எமக்காக எப்போதும் இறைவனை மன்றாடுவவிராக. ஆமென்.

மன்றாட்டு மாலை

முத: ஆண்டவரே இரக்கமாயிரும் //

முத: கிறிஸ்துவே இரக்கமாயிரும் //

முத: ஆண்டவரே இரக்கமாயிரும் //

முத: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்

*எல்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டை நன்றாக கேட்டருளும்*

முத: விண்ணகத்தில் இருக்கும் பிதாவகிய இறைவா

*எல்: எங்களைத் தயை பண்ணி இரட்சியும் சுவாமி*

முத: உலகத்தை மீட்டு இரட்சித்த மகனாகிய இறைவா

*எல்: எங்களைத் தயை பண்ணி இரட்சியும் சுவாமி*

முத: தூய ஆவியாகிய இறைவா

*எல்: எங்களைத் தயை பண்ணி இரட்சியும் சுவாமி*

முத: இயேசுவுக்காக வேதனை ஆயிரம் ஏற்ற புனித அல்போன்ஸம்மாளே,

முத: இறைவனுக்காக தியாகப் பலியான புனித அல்போன்ஸம்மாளே,

முத: சிலுவையின் பாதையில் நடந்தவராகிய புனித அல்போன்ஸம்மாளே,

முத: தியாக பலி பீடத்தில் அற்புதமான புனித அல்போன்ஸம்மாளே,

முத: பொறுமையின் சிகரமாகிய புனித அல்போன்ஸம்மாளே,

முத: தியாகத்தின் துரும்பினை வாழ்வாக்கிய புனித அல்போன்ஸம்மாளே,

முத: பொன்கதிர் வீசும் தாரகமாகிய புனிய அல்போன்ஸம்மாளே,

முத: மக்கள் சுதந்திரத்தைச் சுவைக்க, தன் சொந்த சுகங்களை மறந்தவராகிய புனித அல்போன்ஸம்மாளே,

முத: விண்ணில் உயர்ந்த விண்மலராகிய புனித அல்போன்ஸம்மாளே,

முத: திரு பலியில் மூலம் இறை இயெசுவை நாம் காணச்செய்த புனித அல்போன்ஸம்மாளே

முத: தாரணியில் நன்மை பொழிந்தவராகிய புனித அல்போன்ஸம்மாளே,

முத: தரித்திரத்தின் முன்மாதிரியாகிய புனித அல்போன்ஸம்மாளே,

முத: கீழ்ப்படிதலின் இளநிலவாகிய புனித அல்போன்ஸம்மாளே

முத: பரிசுத்தத்தை என்றும் காத்தவரவாகிய புனித அல்போன்ஸம்மாளே,

முத: பிரார்த்தனையாகிய மலர்களை கிறிஸ்துவுக்கு அர்ச்சனை செய்தவராகிய புனித அல்போன்ஸம்மாளே,

முத: கருணையின் நிறை குடமாகிய புனித அல்போன்ஸம்மாளே,

முத: புனித கிளாரம்மாளின் சபையின் விரிந்த நறுமலராகிய புனித அல்போன்ஸம்மாளே,

முத: கன்னியர்களின் முன்மாதிரியாகிய புனிய அல்போன்ஸம்மாளே,

முத: புனித பிரான்சிஸ்குவின் பாதையில் சமாதானத்தை பரப்ப பணிபுரிந்த புனித அல்போன்ஸம்மாளே,

முத: வேதனையால் துடிக்கும் மக்களின் அடைக்கலமாகிய புனித அல்போன்ஸம்மாளே,

முத: தியாகம் தன்னுடைய விதியென்று, அன்பின் கீதங்களாகிய புனித அல்போன்ஸம்மாளே,

முத: அனுதினம் உயரும் பிரச்சனைகள், பரிகாரத்தின் கருவாக்கி, நீதி கிடைப்பதற்காக செபிக்கும் புனித அல்போன்ஸம்மாளே,

முத: இறுதி தினத்தில் நின் மக்களாய், நாங்கள் இறை சந்நிதியில் வந்து சேர்வதற்காய் இறைவனை இரைஞ்சும் புனித அல்போன்ஸம்மாளே,

முத: மாணவர்களின் பாதுகாவலியான புனித அல்போன்ஸம்மாளே,

முத: இளையர்கள் அறிவிலும் பண்பிலும் முன்னேற அயராது உழைத்த புனித அல்போன்ஸம்மாளே,

முத: குழந்தைகள் மீது அலவில்லா பற்றுக்கொண்ட புனித அல்போன்ஸம்மாளே

முத: புனித தேவசகாயம் அடிகளாரே

முத: புனித ஜோசப் வாஸ் அடிகளாரே

முத: புனித அருளாநாந்தர் அடிகளாரே

முத: புனித கூரியாகோஸ் அடிகளாரே

முத: புனித தோமா அடிகளாரே

முத: புனித அன்னை தெரேசம்மாளே

முத: முக்தி பேறுபெற்ற புனித கார்லோஸ் அடிகளாரே

முத: உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே

*எல்: எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும்!*

முத: உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே

*எல்: எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும்!*

முத: உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே

*எல்: எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்!*

முத: உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே

*எல்: எங்கள் மேல் இரக்கமாயிரும்!*

## இறுதி செபம்

முத: புனித அல்போன்சாவே நம் மீட்பர் இயேசு கிறிஸ்துவின் பாடுகளிலும் மரணத்திலும் உயிர்ப்பிலும் பங்குகொண்ட நீர் எங்கள் மத்தியில் இருந்து தேர்ந்து கொள்ளப்பட்டீர். புண்ணியத்தில் வளர்ந்த நீர் இறைவனால் புனித நிலைக்கும் மோட்ச பாக்கியத்திற்க்கும் அழைத்து கொள்ளப்பட்டீர். எங்களின்
துன்பங்களிலும் துயரங்களிலும் இறைவனிடம் எமக்காய் பரிந்து பேசும். ஓ துன்பங்களால் தூய்மையடைந்த தூயகமே உம்மை போல் நாங்களும் இறைவனை முற்றிலும் சரணடைந்து தூய வாழ்வு வாழ வழி நடத்தும். கிறிஸ்துவின் பாடுகளுக்காகவும் எம் பாவங்களின் மன்னிப்பிற்காகவும் அனைத்து மக்களின் முன்னேற்றத்திற்காகவும் மீட்பிற்க்காகவும் எங்கள் துன்பங்களை பொறுமையோடு ஏற்று இறை மகிமைக்காக வாழும் வரம் தாரும். ஆமென்.

## பரிசுத்த பாப்பரசரின் கருத்துக்கள் நிறைவேறும் படியாக ஜெபிப்போமாக

முத: விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே, உமது பெயர் தூயது எனப் போற்றப்பெறுக! உமது ஆட்சி வருக! உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல மண்ணுலகிலும் நிறைவேறுக!

*எல்: எங்கள் அன்றாட உணவை இன்று எங்களுக்குத் தாரும். எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்வோரை நாங்கள் மன்னிப்பது போல எங்கள் குற்றங்களை மன்னியும். எங்களை சோதனைக்கு உட்படுத்தாதேயும். தீயோனிடமிருந்து எங்களை விடுவித்தருளும். ஆமென்.*

முத: அருள் மிகப் பெற்ற மரியே வாழ்க! / ஆண்டவர் உம்முடனே. / பெண்களுக்குள் ஆசி பெற்றவர் நீரே. / உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசுவும் / ஆசி பெற்றவரே./

*எல்: தூய மரியே / இறைவனின் தாயே / பாவிகளாய் இருக்கிற எங்களுக்காக / இப்பொழுதும் / எங்கள் இறப்பின் வேளையிலும் / வேண்டிக்கொள்ளும். ஆமென்.*

## இறுதியில்

முத: அர்ச்சிஷ்ட சிலுவை அடையாளத்தினாலே எங்கள் சத்துருக்களிடமிருந்து எங்களை இரட்சித்தருளும் எங்கள் சர்வேசுவரா! தந்தை, மகன், தூய ஆவியின் பெயராலே

*எல் : ஆமென்.*